சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை 2023-2024-ஆம் ஆண்டு செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை.

அரசாணை (நிலை) எண். 22

நாள்: 23.01.2024.
திருவள்ளுவராண்டு 2055,
சோபகிருது வருடம், தை 9

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக் கல்வி (இ2) த் துறை, நாள் 30.03.2005.
2. அரசாணை (நிலை) எண்.127, பள்ளிக் கல்வி (இ2)த் துறை, நாள் 01.07.2005.
3. அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக் கல்வி [பக5(2)]த் துறை,நாள் 27.11.2014.
4. அரசாணை (நிலை) எண்.71, பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை, நாள் 28.03.2023
5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்:25213/ கே5/2023 நாள் 25.10.2023

ஆணை :-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படும் என்றும், இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ / மாணவியரின் கல்விச் செலவிற்காகவும், அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மேலே

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடும், அதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.50,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-2023-ஆம் ஆண்டில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.4,60,25,000/- (ரூபாய் நான்கு கோடியே அறுபது இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு ரூ.9,01,25,000/- (ரூபாய் ஒன்பது கோடியே ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.13,61,50,000/- (ரூபாய் பதின் மூன்று கோடியே அறுபத்தி ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், இத்தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிட அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலும், ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்குநரது கடிதத்தில், தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில், 19.10.2023 அன்றைய நிலவரப்படி, நிலுவையிலுள்ள 671 விண்ணப்பங்களில் ரூ. 50,000/- வைப்பு நிதி தொகைக்கான 18 விண்ணப்பங்கள் (18 x 50,000 = 9,00,000) மற்றும் ரூ. 75,000/- வைப்பு நிதி தொகைக்கான 388 விண்ணப்பங்களுக்கு (388 x 75,000 = 2,91,000) ஆக மொத்தம் ரூ. 3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) தேவைப்படுகிறது என்றும் இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.3.00 கோடி என்றும் அத்தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்குவதற்கும் ஆணைகள் வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசிலனை செய்து, 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு நிதியதவி பெறும் பள்ளிகளில் 1- ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியரின்

வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு 2023- 2024 – ஆம் கல்வியாண்டில் நிலுவையில் உள்ள மொத்தம் 671 (18 x ரூ. 50,000/- மற்றும் 653 x ரூ 75,000/- ) விண்ணப்பங்களுக்கு தேவைப்படும் செலவினத் தொகை ரூ. 4,98,75,000/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஐ ஒப்பளிப்பு செய்தும் இத்தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிட அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது :-

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

**<u>தொடக்கக் கல்வி இயக்ககம்</u>** ரூ.4,98,75,000/-

2202 - பொதுக்கல்வி - 01 - தொடக்கக் கல்வி - 800 - ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - BB அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்தாலோ, நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படும் மாணவ / மாணவியருக்கு நிதியுதவி வழங்குதல் - தொடக்கக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளவை - 309 உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு.2202 01 800 BB 30903)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி 2023-24 -ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலே பத்தி 5 -ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை, இவ்வலுவலக மின் கோப்பு எண்.5767/பக5(2)/2023, நாள். 05.01.2024-இல் நிதித் துறையால் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ. குமரகுருபரன்
அரசு செயலாளர்.

**பெறுநர்**

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை-35.